2004 நவம்பர் 17]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 7, திரு. ஏ.கே. செல்வராஜ், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்.

7—

சாலை அமைத்தல்

***19512—திரு. ஏ.கே. செல்வராஜ்:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேட்டுப்பாளையம் தொகுதி, மலைவாழ் மக்கள் இருளர் வகுப்பினர் வசிக்கும் தோலம்பாளையம் முதல் கோபனேரி வரை சாலை அமைக்கும் பணி நடப்பு ஆண்டில் தொடங்கப்படுமா?

மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையம் தொகுதியில் மலைவாழ் மக்களின் நலனுக்காக தோலம்பாளையம் முதல் கோபனேரி வரை 16 கி.மீ. தூரத்திற்கு தார்ச் சாலை அமைக்க ரூ.2.45 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 12 கி.மீ. தூரத்திற்கு மிகத் தரம் வாய்ந்த தார்ச் சாலை அமைக்கப்பட்டு, தற்போது இச்சாலை மலைவாழ் மக்களின் பயன்பாட்டில் இருந்து வருகிறது. மீதம் உள்ள 4 கி.மீ. தூரத்திற்கான சாலை வனப் பகுதியில் வருவதால் வனத் துறை மூலமாக இச்சாலை அமைக்கும் பணி தற்போது நடைபெற்று வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஏ.கே. செல்வராஜ்.

திரு. ஏ.கே. செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வினா 2001—இல் என்னால் கேட்கப்பட்டது. மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்கு, என்னுடைய மேட்டுப்பாளையம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட தோலம்பாளையம் மற்றும் கோபனேரி பகுதியில் வசிக்கின்ற ஆதிவாசி மக்களுக்கு தார்ச் சாலை அமைக்கப்பட வேண்டுமென்று கோரிக்கை மனு கொடுக்கப்பட்டதின் பேரிலே மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் மூலமாக 310 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, அதிலே 230 இலட்சம் ரூபாய்க்கு தோலம்பாளையம் முதல் கோபனேரி வரை உள்ள 16 கி.மீ. சாலை

நல்ல தரமான சாலையாக மாற்றப்பட்டிருக்கிறது. மீதம் உள்ள 90 இலட்சம் ரூபாய் செலவிலே சிறுமுகை பகுதியில் உள்ள காந்தையூரிலே இருக்கின்ற ஒரு பள்ளத்திலே 40 இலட்சம் ரூபாயிலே ஒரு பாலமும், 25 இலட்சம் ரூபாயிலே அந்தப் பகுதிக்கு ஒரு தார்ச் சாலையும் அமைத்துக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதேபோல தோலம்பாளையத்திலிருந்து நீலாம்பதி வரையில் இருக்கின்ற அந்த 3.5 கி.மீ. சாலைக்கு 55 இலட்சம் ரூபாயும், தோலம்பாளையத்திலிருந்து முட்டியூர் வரை இருக்கின்ற அந்தப் பகுதிக்கும், நீலாம்பதியிலிருந்து ஊக்கையனூர் போன்ற பகுதிகளுக்கும் தார்ச் சாலைகள் எல்லாம் அமைக்கின்ற பணிகள் இப்போது முடிவுற்றிருக்கின்றன. அந்தப் பகுதியிலே வசிக்கின்ற ஆதிவாசி மக்களுக்கு மொத்தம் 380 இலட்சம் ரூபாய் செலவிலே தார்ச் சாலைகள் எல்லாம் அமைத்து முடிக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, மலைவாழ் மக்களுடைய முன்னேற்றத்திற்காக நிதியை ஒதுக்கித் தந்திருக்கின்ற எங்களுடைய இதய தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு மேட்டுப்பாளையம் சட்டமன்றத் தொகுதியிலே இருக்கின்ற பொது மக்கள் சார்பாகவும், ஆதிவாசி மக்கள் சார்பாகவும், என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியினைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி டி. யசோதா.

திருமதி டி. யசோதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலைவாழ் மக்கள் வசிக்கின்ற பகுதிகளுக்கு மட்டும்தான் ஆதிதிராவிடர் நலத் துறையின் மூலமாக சாலைகள் அமைக்கப்படுமா அல்லது ஆதிதிராவிடர் மக்கள் வசிக்கின்ற பகுதிகளுக்கும் சாலைகளை அமைக்கின்ற பணி இருக்கிறதா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலைவாழ் மக்கள் வசித்து வருகிற பகுதிகளுக்கு ஆதிதிராவிடர் நலத் துறையின் மூலமாக சாலைகள் அமைக்கப்பட்டு வருகின்றன என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 8, திரு. ஆ. ராஜகோபால், மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.